தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு–2051

2020 பிப்ரவரி 19, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.”

இந்தத் தொழிலை, இத்தகைய முறையால் இவர் முடிப்பார் என்பதை நன்றாகத் தேர்ந்து தெளிந்த பின்னர் அந்தத் தொழிலைச் செய்யும் பொறுப்பினை அவரிடம் விட்டுவிட வேண்டும்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. கி.பெ. காத்தமுத்து அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. கி.பெ. காத்தமுத்து அவர்கள் 16–2–2020 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கி.பெ. காத்தமுத்து அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் தொட்டியம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*